**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண். 118/2018**

2025–ம் வருடம் டிசம்பர் திங்கள் 02–ம் நாளன்று 82 வது பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.44–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்.** | : | **ஜெ.பர்வதம்** | **தொழில்** | : | |
| **த/பெ.** | : | | **வட்டம்** | : | |
| **முகவரி** | : | | **மதம்** | : | |
| **ஜாதி** | : | | **வயது** | : | |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் 82 வது பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். 82 வது பிரதிவாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் பி.வா.சா.ஆ.234 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 02.12.2008–ம் தேதியிட்ட 82 வது பிரதிவாதி பெயரிலான கிரைய ஆவணம் எண்.7412/2008 சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.235 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 01.12.2025–ம் தேதியிட்ட 82 வது பிரதிவாதி பெயரிலான வில்லங்கச் சான்றிதழ் ஆன்லைன் பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.236 ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(நகல் ஆவணம் முழுமையாக இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)** 01.12.2025–ம் தேதியிட்ட 82 வது பிரதிவாதி பெயரிலான கூட்டுப்பட்டா எண்.1336 ஆன்லைன் பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.237 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதிகள் தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**<u>1 முதல் 4, 6 முதல் 15, 18, 19, 21 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 50, 52 முதல் 58, 60, 62, 63, 64, 65, 67, 68, 69, 70 முதல் 76, 78 முதல் 87, 89 முதல் 100, 102, 104 முதல் 105, 107, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** : இல்லை.

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் கன்னிவாடியில் வசித்து வருகிறேன். எனது சொந்த ஊரில் இருந்து தும்பிவாடி கிராமம் சுமார் 100 கிலோமீட்டர் தொலைவு இருக்கலாம். தும்பிவாடி கிராமத்தில் எனக்கும், என் குடும்பத்தாருக்கும் பூர்வீக வகையில் எந்த சொத்துக்களும் இல்லை. பி.வா.சா.ஆ.235 மூலம் நீங்கள் வாங்கிய கிரையபத்திரத்தை பி.வா.சா.ஆ.8 ன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த ரவிச்சந்திரனுக்கே அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் உரிமையில்லை என்பதால் பி.வா.சா.ஆ.235–ன் கீழ் நீங்கள் வாங்கிய கிரையம் எழுதிக்கொடுப்பதற்கு ரவிச்சந்திரனுக்கு சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்திற்கு இன்று சாட்சியம் அளிக்க யார் உங்களை அழைத்து வந்தார்கள் என்றால் வழக்கறிஞர் அழைத்ததின் பேரில் வந்தேன். 106 நபர்கள் கிரையம் பெற்றதற்காக நீங்கள் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளீர்களா என்றால் சரியல்ல. நீங்கள் வாங்கிய பி.வா.சா.ஆ.235 கிரையம் செல்லாததால் அதன் அடிப்படையில் வாங்கிய பி.வா.சா.ஆ.237 கூட்டுப்பட்டா செல்லாது என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN
Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.12.03 17:35:50 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.